**செ. கு. எண்: 072** **நாள் : 19.08.2015**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 19.8.2015

தமிழ்நாட்டில் அண்மையில் பெய்த மழையின் காரணமாக 14.5.2015 அன்று புதுக்கோட்டை மாவட்டம், இலுப்பூர் வட்டம், செங்கப்பட்டியைச் சேர்ந்த திருமதி சிகப்பாயி மற்றும் அவருடைய மகன் சிவா;

17.5.2015 அன்று திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டம், கோதைமங்கலம் கிராமத்தைச் சேர்ந்த திரு சின்னான்;

மதுரை மாவட்டம், உசிலம்பட்டி வட்டம், வலங்காகுளம் கிராமத்தைச் சேர்ந்த திரு. காசிமாயன்;

10.5.2015 அன்று சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டம், அரசிராமணி கிராமத்தைச் சேர்ந்த திருமதி மொட்டையம்மாள்;

18.5.2015 அன்று கன்னியாகுமரி மாவட்டம், அகஸ்தீஸ்வரம் வட்டம், கோட்டார் கிராமத்தைச் சேர்ந்த திருமதி லூர்தம்மாள்;

--ஆகியோர் வீட்டின் சுவர் இடிந்து விழுந்ததில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

18.5.2015 அன்று திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானல் வட்டம், வட்டக்கானல் உட்கடை வனப்பகுதியில் சுற்றுலா பயணிகள் மீது எதிர்பாராத விதமாக பெரிய மரம் சாய்ந்து விழுந்ததில், பெங்களூர், சிக்கபானாவாரா பகுதியைச் சேர்ந்த திரு. கிரண்குமார் என்பவரின் மனைவி சுரேகா, பெரம்பலூர் நகரைச் சேர்ந்த திரு. விஜய் என்பவரின் மகன் வினோத் மற்றும் கடலூர் மாவட்டம், குறிஞ்சிப்பாடி, வடக்காட்டைச் சேர்ந்த திரு. இளங்கோ ஆகியோர் பலத்த காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தனர் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்த துயர சம்பவங்களில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த துயரச் சம்பவங்களில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ஒரு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**